# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 345/மா/2025**

**நாள்: 17.04.2026**

C. ஹரிபாபு
ஆவடி, சென்னை–55 --- முறையீட்டு மனுதாரர்

1. ஆணையாளர்,
   ஆவடி மாநகராட்சி
2. திருமதி சுமதி, திருமுல்லைவாயல்,
   சென்னை–62 --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவரின் 28.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.08.2025 அன்று பெறப்பட்டு 345/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவர் தனது 28.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட திருமுல்லைவாயில் பகுதியில் சட்டத்திற்கு புறம்பாக விதிமுறை மீறி வணிக வளாகம் கட்டிடம் சுமதி கணவர் பெயர் லோகநாதன் Door No.30, Ravindhran Nagar, திருமுல்லைவாயில் ஆவடி என்பவர் வணிக வளாகம் கட்டிட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளார்.

ஆவடி மாநகராட்சி பணிபுரியும் நகரமைப்பு பிரிவு உள்ள நகரமைப்பு அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக விதிமுறை மீறி உள்ள வணிக வளாகம் கட்டிடம் கள ஆய்வு செய்து கட்டிடம் முறையாக கட்டப்படவில்லை. அரசு விதி படி கட்டிடங்கள் சுற்றி இடைவெளி விடாமல் கட்டப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வாங்கப்படவில்லை என்று கள ஆய்வு செய்த பிறகு ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவு நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள்

சட்டப்படி நடவடிக்கை எடுக்க சுமதி கணவர் பெயர் லோகநாதன் வணிக வளாகம் கட்டப்பட்டுள்ள மீது நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன்படி பரிவு 56(1) மற்றும் உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85–ன் கீழ் STOP work Notice / Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and seal and demolition Notice அமலாக்க நடவடிக்கை அன்றைய தேதியில் ஆவடி மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மூலம் தபால் மூலம் மற்றும் நேரடியாக நோட்டீஸ் விதிமீறல் கட்டிட மனுதாரருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது. தேதி வாரியாக

1. Notice for production of documents தேதி 11.5.2023
2. Notice of inspection தேதி 22.5.2023
3. Site inspection தேதி 25.5.2023
4. Previous Notice தேதி 9.6.2023 வழங்கப்பட்டுள்ளது

Ground floor size 31.6 x 29.5 = Extent 926.63 sq.ft (86.08 sq.mt)

First floor–floor size 31.6 x 29.5 = Extent 926.63 sq.ft (86.08 sq.mt)

Second floor–floor size 31.6 x 29.5=Extent 926.63 sq.ft (86.08 sq.mt)

Third floor size 31.6x11.0=Extent 347.6 sq.ft (23.29 sq.mt) + OHT

சட்ட புறம்பாக உள்ள வணிக விதிமுறை மீறல்கள் கட்டிடம் அளவுகள் வணிக வளாகம் கட்டிடம் அகற்றியும் Lock and seal and demolition அமலாக்க நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடுமாறு மிக பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அதிகாரி மணிவண்ணன் என்பவர் பணியிடம் மாற்றம் செய்து விடுகிறார்கள். அதன் பிறகு விதிமுறைகள் மீறி வணிக வளாகம் கட்டிடம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பிறகு வந்த நகரமைப்பு பிரிவு அதிகாரி சுரேஷ் என்பவரை அவரது அலுவலகத்தில் பலமுறை சென்று நேரில் பலமுறை சந்தித்து வணிக வளாகம் கட்டிடம் மீது தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாய்மொழியாக புகார் கூறிவிட்டு வந்தேன். நகரமைப்பு பிரிவு அதிகாரி சுரேஷ் அவர்கள் கடந்த 8 மாதங்களாக விதிமீறல் வணிக வளாகம் கட்டிடம் மீது அதன் தொடர் நடவடிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

விதிமீறல் கட்டிடங்கள் சம்பந்தமான நோட்டீஸ் வழங்கிய கோப்புகள் அலுவலகத்தில் இருந்து மறைத்து விட்டு காணாமல் செய்து விட்டு சில நோட்டீஸ் கிழித்து விட்டார்கள்.

விதிமீறி வணிக வளாகம் கட்டிடம் நடவடிக்கை எடுக்காமல் லஞ்சம் வாங்கும் கொண்டு விதிமீறல் கட்டிடம் கட்டப்பட்டுள்ள நபருக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார். சட்டம் தெரிந்து அரசாணை தெரிந்து நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகிறார். இவர் மீது துறை ரீதியான கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மீண்டும் சுமதி கணவர் பெயர் லோகநாதன் விதிமீறல் வணிக வளாகம் கட்டிடம் மீது முதல்வரின் முகவரி கூட்டத்தில் புகார் மனு மாவட்ட ஆட்சியர் GDP புகார் எண் 12133581 ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அதிகாரி அலுவலக கோப்பு எண் ந.க. எண் 3940/2025/எப்2 மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மனுதாரர் என்னை மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர். ஒரு கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்க கடந்த மூன்று ஆண்டுகளாக போராடி வருகிறேன். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்த அனைத்து கோப்புகளை நேரடியாக விசாரணை செய்ய வேண்டும். சட்டத்திற்கு புறம்பான விதிமீறல் வணிக வளாகம் கட்டிடம்

மீது ஒரு மாதத்திற்குள் கட்டிடத்தை அகற்றியும் Remove Lock and seal and demolition அமலாக்க நடவடிக்கை எடுத்த விவரத்தை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர், முதல் எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தனது 18.03.2026 மற்றும் 24.03.2026 நாளிட்ட கடிதங்களில் ந.க. எண் 0347/2023/எப்2–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

<u>18.03.2026 நாளிட்ட அறிக்கை</u>

"தமிழ்நாடு முறைமன்ற நடுவத்திலிருந்து வரப்பெற்ற திரு. சி. ஹரிபாபு என்பவரின் புகார் எண் 345/மா/2025 நாள் 17.10.2025–இன்படி ஆவடி மாநகராடசி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமத்தில், ரவீந்திரன் நகர், 60 அடி சாலை (வலது புறம்) எண் 30–இல் உள்ள திருமதி சுமதி க/பெ திரு. லோகநாதன் என்பவர்கள் சட்டதிற்கு புறம்பாக அனுமதியற்ற வணிகம் கட்டிடத்தினை கட்டி உபயோகித்து வருகின்றதாக அறியபட்டதின் அடிப்படையில் அவ்வனுமதியற்ற கட்டிடத்திற்கு சட்டபூர்வமாக ஏற்கனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இன் கீழ் பிரிவு 56 & 57–இன்படி படிவம்–1 நாள் 10.01.2023, 25.04.2023 அன்றும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–இன் கீழ் படிவம்–2 நாள் 19.05.2023, மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–இன் கீழ் பிரிவு 56(2) படிவம் 3 நாள் 09.06.2023, 10.07.2023–படி வழங்கப்பட்டது. மீண்டும் 02.01.2026 அன்றும் வழங்கப்பட்டது.

ஆனால் அவர்கள் எவ்வித விளக்கம் அளிக்கப்படாததாலும் முறைமன்ற புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இன் கீழ் 56 (2–A)/57(4) பிரிவு 35/1972–இன் கீழ் இவ்வங்கீகாரமற்ற கட்டித்தினை (Lock and Seal) பூட்டி முத்திரையிட நாள் 19.05.2023, 19.12.2025–இல் அறிவிப்பு வழங்கி 14 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டது.

தற்போதுவரை திருமதி சுமதி க/பெ திரு. லோகநாதன் எவ்வித பதிலும் அளிக்காததாலும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களுக்கு எவ்வித கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்கள் அல்லது நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் அது தொடர்பான வரைபடங்கள் அல்லது உத்தரவுகள் ஏதும் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்து விளக்கம் ஏதும் வழங்காததாலும், கால அவகாசம் முடிவடைந்ததாலும் நாள் 04.02.2026 அன்று உத்தேச கட்டிடத்தினை பூட்டி முத்திரையிடப்பட்டது என்ற விவரத்தினை இக்கடிதம் மூலம் தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

<u>24.03.2026 நாளிட்ட அறிக்கை</u>

"தமிழ்நாடு முறைமன்ற நடுவத்திலிருந்து வரப்பெற்ற திரு. சி. ஹரிபாபு என்பவரின் புகார் எண் 345/மா/2025 நாள் 17.10.2025–இன்படி ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமத்தில், ரவீந்திரன் நகர், 60 அடி சாலை (வலது புறம்) எண் 30–இல்

உள்ள திருமதி சுமதி க/பெ திரு. லோகநாதன் என்பவர்கள் சட்டதிற்கு புறம்பாக அனுமதியற்ற வணிகம் கட்டிடத்தினை கட்டி உபயோகித்து வருகின்றதாக அறியபட்டதின் அடிப்படையில் அவ்வனுமதியற்ற கட்டிடத்திற்கு சட்டபூர்வமாக ஏற்கனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இன் கீழ் பிரிவு 56 & 57–இன்படி படிவம்–1 நாள் 10.01.2023, 25.04.2023 அன்றும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–இன் கீழ் படிவம்–2 நாள் 19.05.2023, மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–இன் கீழ் பிரிவு 56(2) படிவம் 3 நாள் 09.06.2023, 10.07.2023–படி வழங்கப்பட்டது. மீண்டும் 02.01.2026 அன்றும் வழங்கப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்தை 04.02.2026 அன்று காலை 11.00 மணியளவில் கட்டிடத்தை பூட்டி சீல் வைக்கப்பட்டது என இக்கடிதம் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.''

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''ஆவடி மாநகராட்சி, திருமுல்லைவாயில் பகுதியில் கதவு எண் 30, ரவீந்திரன் நகரில் அமைந்துள்ள சுமதி என்பவரின் கணவர் திரு.லோகநாதன் ஆவடி மாநகராட்சி அனுமதியில்லாமல் சட்டத்திற்கு புறம்பாக வணிக வளாக கட்டிடம் கட்டியுள்ளார். ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் கள ஆய்வு செய்ததில், மேற்கண்ட வணிக வளாக கட்டிடம் முறையாக இடைவெளி விடாமலும், கட்டிடம் கட்ட அனுமதி பெறாமலும், கட்டப்பட்டதால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56(1) மற்றும் பிரிவு 85–ன் கீழ் Stop work Notice / Notice calling for approved plan அறிவிப்பு மற்றும் Lock and seal demolition Notice dated 11.05.2023, 22.05.2023 மற்றும் 09.06.2023 ஆகியவை கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது விசாரணையில் மேற்கண்ட சுமதி என்பவரின் கட்டிடத்திற்கு Lock and Seal செய்து விட்டதாக தெரிவித்ததை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''.

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவடி மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 27.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருமதி சுமதி, க/பெ திரு. லோகநாதன் அவர்களின் கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதியின்றி கட்டப்பட்டது என கண்டறியப்பட்டு அவ்வனுமதியற்ற கட்டிடத்திற்கு சட்ட பூர்வமாக ஏற்கனவே தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971–ன்கீழ் பிரிவு 56 மற்றும் 57ன் படிவம் 1, நாள் 10.01.2023, 25.04.2023 அன்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் கீழ் படிவம் 2, நாள் 19.05.2023 மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 கீழ் 56 (2) படிவம் 3 நாள் 09.06.2023, 10.07.2023ன்படி வழங்கப்பட்டது. மீண்டும் 02.01.2026 அன்றும் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் எவ்வித விளக்கம் அளிக்கப்படாததாலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் கீழ் 56 (2–A)/57(4) பிரிவு 35/1972–இன் கீழ் இவ்வங்கீகாரமற்ற கட்டித்தினை (Lock and Seal) பூட்டி முத்திரையிட நாள் 19.05.2023, 19.12.2025ல் அறிவிப்பு வழங்கி 14 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் திருமதி சுமதி, க/பெ திரு. லோகநாதன் எவ்வித பதிலும் அளிக்காததாலும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களுக்கு எவ்வித கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்கள் அல்லது நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் அது தொடர்பான வரைபடங்கள் அல்லது உத்தரவுகள் ஏதும் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்து விளக்கம் ஏதும் வழங்காததாலும், கால அவகாசம் முடிவடைந்ததாலும் நாள் 04.02.2026 அன்று உத்தேச கட்டிடத்தினை பூட்டி முத்திரையிடப்பட்டது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''.

7. இரண்டாம் எதிர்மனுதாரர் 27.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

''ஆவடி மாநகராட்சி, திருமுல்லைவாயில் பகுதியில் கதவு எண் 30, ரவீந்திரன் நகரில் சுமதி என்பவரின் கணவர் திரு.லோகநாதன் ஆவடி மாநகராட்சியில் கட்டிடம் கட்ட அனுமதி பெறாமல், சட்டத்திற்கு புறம்பாக வணிக வளாக கட்டிடம் கட்டியும், முறையாக இடைவெளி விடாமலும், கட்டப்பட்டுள்ளதால், ஆவடி மாநகராட்சியால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56(1) மற்றும் பிரிவு 85–ன் கீழ் Stop work Notice / Notice calling for approved plan அறிவிப்பு மற்றும் Lock and seal demolition Notice dated 11.05.2023, 22.05.2023 மற்றும் 09.06.2023 ஆகியவை கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டு, தற்போது விசாரணையில் மேற்கண்ட சுமதி என்பவரின் கட்டிடத்திற்கு Lock and Seal செய்து விட்டதாக ஆவடி மாநகராட்சி தெரிவித்ததை மனுதாரர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருமதி சுமதி, க/பெ திரு. லோகநாதன் அவர்களின் கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் என கண்டறியப்பட்டு அவ்வனுமதியற்ற கட்டிடத்திற்கு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57ன் படிவம் 1, நாள் 10.01.2023, 25.04.2023 அன்றும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் கீழ் படிவம் 2, நாள் 19.05.2023 மற்றும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 கீழ் 56 (2) படிவம் 3 நாள் 09.06.2023 மற்றும் 10.07.2023–ல் ஆவடி மாநகராட்சியால் கட்டிட உரிமையாருக்கு தாக்கீதுகள் வழங்கப்பட்டும், கட்டிட உரிமையாளர் எவ்வித விளக்கம் அளிக்காததால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் கீழ் 56 (2–A)/57(4) பிரிவு 35/1972–இன் கீழ் மேற்கண்ட கட்டித்தினை (Lock and Seal) பூட்டி முத்திரையிட 19.05.2023 மற்றும் 19.12.2025ல் அறிவிப்பு வழங்கி 14 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டது என்பதும், மீண்டும் 02.01.2026 அன்றும் தாக்கீது வழங்கப்பட்டதற்கும், திருமதி சுமதி, க/பெ திரு. லோகநாதன் எவ்வித பதிலும் அளிக்காததாலும், மேலும் வழங்கப்பட்ட படிவங்களுக்கு எவ்வித கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்கள் அல்லது நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் அது தொடர்பான வரைபடங்கள் அல்லது உத்தரவுகள் ஏதும் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்து விளக்கம் ஏதும் வழங்காததாலும், அதற்கான கால அவகாசம் முடிவடைந்ததால் 04.02.2026 அன்று உத்தேச கட்டிடத்தினை ஆவடி மாநகராட்சியால் பூட்டி முத்திரையிடப்பட்டது என்பது ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டவாறு ஆவடி மாநகராட்சி, திருமுல்லைவாயில் பகுதியில் கதவு எண் 30, ரவீந்திரன் நகரில் சுமதி என்பவரின் கணவர் திரு.லோகநாதன் ஆவடி மாநகராட்சி அனுமதியில்லாமல் சட்டத்திற்கு புறம்பாகவும், முறையாக இடைவெளி விடாமலும் கட்டப்பட்ட வணிக வளாக கட்டிடம், கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டதால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்கீழ் ஆவடி மாநகராட்சியால் கட்டிட உரிமையாளருக்கு தாக்கீதுகள் வழங்கப்பட்டு, அதற்கான கால அவகாசம் முடிந்தும் கட்டிட உரிமையாளர் நடவடிக்கை எடுக்காததால், 04.02.2026 அன்று உத்தேச கட்டிடத்தினை ஆவடி மாநகராட்சியால் பூட்டி முத்திரையிடப்பட்டது என ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்ததை, மனுதாரரும் ஏற்றுக் கொண்டுள்ளதால், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. C. ஹரிபாபு,
எண் 21, ஹை ஸ்கூல் தெரு,
மிட்டணமல்லி, ஆவடி, சென்னை–600 055.

(2) ஆணையாளர், ஆவடி மாநகராட்சி, ஆவடி,
சென்னை–600 054.

(3) திருமதி சுமதி,
க/பெ லோகநாதன்,
கதவு எண் 30, ரவீந்திரன் நகர், திருமுல்லைவாயல்,
சென்னை–600 062

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

20/4/26
செயலாளர்